13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

151. 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கான விடுதி (தங்குமிடம்) விதிகளுக்குப் பதிலகற்றீடாக 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் (தங்குமிடம்) விதிகளை இயற்றியது குறித்து பொது (நிருவாகம் I & சட்டமன்றம்)த் துறையின் 23–5–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 320–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

152. 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (உறுப்பினர்களுக்கான சம்பளங்கள் மற்றும் மருத்துவச் செலவுகளை ஈடு செய்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பொது (நிருவாகம் I & சட்டமன்றம்)த் துறையின் 6–6–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 340–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

153. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (மருத்துவக் கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பொது (நிருவாகம் I & சட்டமன்றம்)த் துறையின் 24–7–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 459–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

154. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

155. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் ஆண்டறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

[2023 அக்டோபர் 10

156. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் ஆண்டறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

157. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

354. 2023–2024 ஆம் ஆண்டின் “கூடுதல் செலவுக்கான” மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ்–ஆங்கிலம்)

355. 2023–2024 ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ்–ஆங்கிலம்)

356. 2023–2024 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

357. மதிப்பீட்டுக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2023–2024)

358 முதல் 375 வரை. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து எட்டாவது முதல் எண்பத்து ஐந்தாவது வரையிலான அறிக்கைகள். (2023–2024)

376. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கை. (2023–2024)

377. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2023–2024)

378. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2023–2024)